செய்தி வெளியீடு எண்:595 நாள்:16.12.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (16.12.2016) நோய்தடுப்பு பணிகளை பார்வையிடும் வகையில், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில், சென்னை மாநகரப் பகுதியில் செயல்படும் குழுக்கள் சார்ந்த பணிகளைப் பார்வையிட்டார்கள். மேலும், வர்தா புயல் பாதித்த பகுதிகளான சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுகாதாரத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, நோய் தடுப்பு பணிகளுக்கு ஈடுபடுத்தப்படும் நடமாடும் மருத்துவக் குழுக்கள், 108 அவரகால ஆம்புலன்ஸ் சேவை ஆகியவற்றை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவத் துறை ஆணையர் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழம திட்ட இயக்குநர் டாக்டர் டேரேஸ் அஹமது, இ.ஆ.ப., பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் குழந்தைசாமி, மருத்துவப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் செங்குட்டுவன், மருத்துவக் கல்வி இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் நாராயணபாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

புரட்சித்தலைவி அம்மா காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, வர்தா புயல் காரணமாக மக்களுக்கு எந்தவித தொற்றுநோயும் ஏற்படாமல் தடுக்க போர்க்கால அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொது மக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் மருத்துவ முகாம்கள், நோய் வராமல் தடுக்க நடமாடும் மருத்துவக் குழுக்கள், பாதுக்காக்கப்பட்ட குடி தண்ணீர் உறுதி செய்ய குளோரினேசன் கண்காணிப்பு குழுக்கள், கொசு மற்றும் ஈ

வராமல் தடுக்க பூச்சியியல் வல்லுநர் குழுக்கள், உணவு பாதுகாப்பு குழுக்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தேவையான மருந்து மற்றும் கிருமி நாசினிகள் கையிருப்பில் வைக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பன்முக நடவடிக்கைகளை மருத்துவத் துறை செயல்படுத்தி வருகின்றது.

நோய் தடுப்பிற்கென சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் **161** நடமாடும் மருத்துவ குழுக்கள், **119** எண்ணிக்கையில் **108–**ஆம்புலன்ஸ் சேவைகள், **50** உணவு பாதுகாப்பு குழுக்கள், **50** குளோரினேசன் குழுக்கள் மற்றும் **51** கொசு ஒழிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**மருத்துவ முகாம்கள் மற்றும் நடமாடும் மருத்துவக் குழுக்கள்**

மருத்துவ முகாம்களில் இதுவரை மொத்தம் **52,343** நபர்கள் பயன்பெற்றுள்ளனர். சென்னை பெருநகர மாநகராட்சியில் **80** நடமாடும் மருத்துவக் குழுக்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் **39** நடமாடும் மருத்துவக்குழுக்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் **42** நடமாடும் மருத்துவக் குழுக்கள் என **161** நடமாடும் மருத்துவக் குழுக்கள் நிவாரண பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை**

**108** அவசரகால ஆம்புலன்ஸ் சேவை வழங்க சென்னை பெருநகர மாநகராட்சியில் **40**, காஞ்சிபுரம் மாவட்டத்தில் **46** மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் **33** என மொத்தம் **119** அவசரகால ஆம்புலன்ஸ்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**குளோரினேஷன் குழுக்கள்**

பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு குடிநீரில் குளோரின் பரிசோதனை செய்ய **50** குளோரினேஷன் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்குழுவில் **1** மருத்துவ அலுவலர், **2** சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் **1** மருத்துவ பணியாளர் ஆகியோர் உள்ளனர். இக்குழுக்கள் புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச்சென்றுஆங்காங்கே உள்ள குடிநீர் ஆதாரங்கள்,குடிநீர் மேல்நிலை தொட்டிகள்,வீடுகளில் உள்ள கீழ்நிலை தொட்டிகள் (Water Sumps), குடிநீர் வழங்கும் லாரிகள் முதலியவற்றை ஆய்வுசெய்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**<u>கொசு ஒழிப்பு பணி குழுக்கள்</u>**

கொசுக்கள் மற்றும் ஈக்களை கட்டுப்படுத்தவும் அவைகளால் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் வராமல் தடுக்கவும் 51 கொசு ஒழிப்புபணிகுழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பூச்சியல் வல்லுனர்கள் தலைமையிலான இக்குழுக்கள் பாதிக்கபட்ட பகுதிகளுக்குச் சென்று ஆங்காங்கே கொசுப்புழு ஒழிப்புப்பணிகள் மற்றும் முதிர்கொசுக்களை அழிக்க புகைமருந்து அடித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பணிகளில் 120 பெரிய வாகன புகை அடிக்கும் இயந்திரங்கள் (Vehicle Mounted Fogging Machines) மற்றும் 600 சிறிய புகை அடிக்கும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**<u>உணவு பாதுகாப்பு குழுக்கள்</u>**

உணவு பாதுகாப்பு அலுவலர் அடங்கிய 50 உணவு பாதுகாப்பு குழுக்கள் புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச்சென்று ஆங்காங்கே உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் வழங்கும் லாரிகள் முதலியவற்றை ஆய்வுசெய்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுதவிர அப்பகுதிகளில் உள்ள உணவகங்களிலும் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

**<u>மருந்து பொருட்கள் மற்றும் கிருமி நாசினிகள்</u>**

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தேவையான 90 கோடி மதிப்பிலான மருந்துகள் தமிழகம் முழுவதும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தொற்றுநோய் தடுப்புப் பணிகளுக்காக தேவையான ப்ளீச்சிங் பவுடர் மற்றும் குளோரின் திரவமும் பயன்படுத்தப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. மேற்கண்ட பணிகள் அனைத்தும் செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக 3000–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு எந்தவித தொற்றுநோய்களும் வராவண்ணம் தடுக்க தீவீர நடவடிக்கைகள் சுகாதாரத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**
**நாள்: 16.12.2016.**